# மாசற்ற மற்றும் விபத்தில்லா தீபாவளி பண்டிகையை கொண்டாடுவோம்

தீபாவளி பண்டிகை ஒவ்வொரு வருடமும் தீப ஒளித் திருநாளாக தமிழகத்தில் கொண்டாப்பட்டு வருகிறது. இத்திருநாளில் பெரியவர்கள் முதல் சிறியவர்கள் வரை பட்டாசுகளை வெடிப்பதை காலம் காலமாக தொடர்ந்து செய்துவருகின்றனர்.

தீபாவளி பண்டிகையின் போது பட்டாசுகள் வெடிப்பதனால் ஏற்படும் ஒலி மாசினால் பறவைகள் மற்றும் விலங்கினங்களுக்கு பாதிப்புகள் ஏற்பட வாய்ப்புள்ளது. காற்றில் மாசு ஏற்படுவதால் ஆஸ்துமா மற்றும் பிற நுரையீரல் பிரச்சினைகளால் பாதிக்கப்பட்ட மக்கள் சிரமத்திற்கு ஆளாக வாய்ப்புள்ளது. எனவே காற்று மற்றும் ஒலி மாசு ஏற்படுத்தும் பட்டாசுகளை வெடிப்பதை தவிர்ப்போம்.

மாசற்ற மற்றும் விபத்தில்லா தீபாவளி பண்டிகையை கொண்டாடுவோம்

- பள்ளிகள், மருத்துவமனைகள், புனித தலங்கள் முதலானவை அமைந்துள்ள பகுதிகளில் பட்டாசுகள் வெடிப்பதை தவிர்க்க வேண்டும்.
- விலங்குகள், பறவைகள் சரணாலயங்கள் உள்ள பகுதிகளில் அதிக ஒலி எழுப்பும் பட்டாசுகள் வெடிப்பதை தவிர்க்கவும்.
- குழந்தைகள் பட்டாசு வெடிக்கும் பொழுது பெரியவர்கள் உடன் இருக்குமாறு பார்த்துக்கொள்வது மிகவும் அவசியம்.
- வெடிகளை வெடிக்கும் பொழுது அருகாமையில் குடிசைகள், எளிதில் தீப்பற்றக் கூடிய பொருட்கள் உள்ள இடங்களில் வெடிப்பதைத் தவிர்க்கவும்.
- பட்டாசு வெடிப்பதற்கு முன்பாக பாத்திரங்களில் தண்ணீர், மணல் ஆகியவற்றை தயாராக வைத்துக் கொள்ள வேண்டும்.

தீபாவளி விழிப்புணர்வு செய்திகளை தேசிய பசுமைப்படை மற்றும் சூழல் மன்றங்கள் வாயிலாக மக்களுக்கு மாசற்ற மற்றும் விபத்தில்லா தீபாவளியைக் கொண்டாட வேண்டுமென அறிவுறுத்தப்படுகிறது.

கொண்டாடுவோம்! கொண்டாடுவோம்!

சப்தமில்லா, விபத்தில்லா, மாசற்ற தீபாவளியைக் கொண்டாடுவோம்!

இயக்குநர்
சுற்றுச்சூழல் துறை